## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: R.கிருஷ்ணமூர்த்தி,பி.இ.,

**ந.க.எண்.2048/2017/செம3** **நாள். 30.07.2018**

பொருள்:- குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், செம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.222/1B,2,235/6B மற்றும் 235/7 ஆகியவற்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்:17/2016-ல் அமையும் 3486.79ச.மீ பரப்பளவுள்ள மனுதாரர் உபயோக மனையிடத்தில் தரை + 3 தளங்களில 130 குடியிருப்புகளுடன் அமையும் கட்டிட வரைபடங்களுக்கு - தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.15633/2018 பிஏ2 நாள்.08.06.2018.
2) மனுதாரர் தி/ள் அட்சயா பிரைவேட் லிட் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 12.06.2017.
3) அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.28.03.2012
4) அரசாணை எண்.85, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.05.2017.
5) அரசாணை எண்.135, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.21.07.2017.
6) அரசாணை(நிலை) எண்.53, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.04.2018.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 7486/2009/பிஏ2 நாள்.16.04.2009.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 21075/2009/பிஏ1, நாள்.04.04.2012.
9) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 12201/2017/Spl.cell, நாள்.28.09.2017.
10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 14227/2017/Spl.cell, நாள்.14.12.2017.
11) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.20.06.2018. (உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி, மற்றும் CC கட்டணம் செலுத்தக் கோரியது)
12) மனுதாரர் தி/ள் அட்சயா பிரைவேட் லிட் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.20.07.2018.(உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி செலுத்தியதற்கான விவரம்)

************

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், செம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்: 222/1B,2,235/6B மற்றும் 235/7 ஆகியவற்றில் ஒப்புதலளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்:17/2016-ல் அமையும் 3486.79 ச.மீ பரப்பளவுள்ள மனுதாரர் உபயோக மனையிடத்தில் கீழ்கண்டுள்ளவாறு அமையும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் வழங்கிடவும் சிறப்பு நிபந்தனைகளுடன் கட்டிடஅனுமதி வழங்கவும் வரைபடங்களுக்கு க.வ./ந.ஊ.இ.எண்:126/2018 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது.

**Site Area:3486.79 m²**

| Floor Details | FSI Area m² | Usage |
|---|---|---|
| தரைத்தளம் | 1499.39 | 28குடியிருப்புகள் |
| முதல் தளம் | 1758.50 | 34குடியிருப்புகள் |
| இரண்டாதம் தளம் | 1758.50 | 34குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1758.50 | 34குடியிருப்புகள் |
| **மொத்தம்** | **6774.89** | **130குடியிருப்புகள்** |

மேற்படி மனையிடத்திற்கு " 1 முதல் 3 வரை " என எல்லையிட்டு மனை ஒப்புதலும், அம்மனையிடத்தில் மேற்கண்டுள்ளவாறு அமையும் குடியிருப்பு கட்டுமான வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.து.இ.(செம)எண்.56(அ முதல் இ வரை )/2018 (3தாள்கள்)** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

பார்வை 3-ல் கண்ட அரசாணையின்படி அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி கட்டணம் (ம) நன்னிலை வரி, CC கட்டணம் மற்றும் Shelter Fund ஆகிய கட்டணங்களை அரசுக்கு செலுத்தக்கோரி, பார்வை 11-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டது.

பார்வை 12-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய, உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணம் ரூ.25,50,000/- (ம) நன்னிலை வரி ரூ.14,000/- மற்றும் CC ரூ.2,49,000/-பெறப்பட்டுள்ளன. மேலும் Shelter Fund கட்டணம் ரூ.19,12,500/- குறித்து மனுதாரர் உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

*சிறப்பு நிபந்தனைகள்*

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்பபத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

5. The Provisions in the G.O (Ms.) No. 17, Housing and Urban Development (UD4)(3) department, dated:05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

6. பார்வை 10-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி

   "The Tamil Nadu Government in G.O.Ms.No:112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market,book,sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate regulatory Authority"

***நிபந்தனைகள்***

1. உத்தேச 130 குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்படவேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மனுதாரர் மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.
14. கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடத்தில் உள்ளவாறு வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் ஊராட்சி கட்டிட விதிகள் ஆகியவை நிறைவு செய்யும் வகையில் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
15. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் இரண்டு இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் செம்பாக்கம் ஊராட்சி – திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அனுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் செம்பாக்கம் ஊராட்சி – திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

30/7/18

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு

30/7/18 30.7.18

**இணைப்பு** : ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2
(2x 3 =6)

பெறுநர்
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்
செம்பாக்கம் ஊராட்சி / திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்
திருப்போரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்
M/S.Akshya Pvt.Ltd.,
G-Square, 4th Floor,
No:46, Rajiv Gandhi Salai(OMR),
Kandachavadi,
Chennai – 600 096.

தனி அலுவலர், செம்பாக்கம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.மா.முரளி.

ந.க.எண். 151/2018/ஆ1. நாள்.01.09.2018

பொருள் - குடியிருப்பு கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - செம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Akshaya Pvt.Ltd., என்ற நிறுவனத்தின் சர்வே எண்கள்.222/1B,2,235/6B & 235/7 ஆகியவற்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்.17/2016-ல் அமையும் 3486.79 ச.மீ பரப்பளவுள்ள மனுதாரர் உபயோக மனையிடத்தில் தரை + 3தளங்களில் 130 குடியிருப்புகளுடன் அமையும் கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது - கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.28.03.2012.
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.2048/2017/செம3 நாள்.30.07.2018.
3.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம் - III)-ன் ஆய்வறிக்கை.
4.செம்பாக்கம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.26 நாள்.01.09.2018.
பலவகை வரவு ரசீது எண்.7118 நாள்.01.09.2018.

********

உத்தரவு -

பார்வையில் காணும் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், செம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Akshaya Pvt.Ltd., என்ற நிறுவனத்தின் சர்வே எண்கள்.222/1B,2,235/6B & 235/7 ஆகியவற்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்.17/2016-ல் அமையும் 3486.79 ச.மீ பரப்பளவுள்ள மனுதாரர் உபயோக மனையிடத்தில் கீழ்கண்டுள்ளவாறு அமையும் குடியிருப்பு கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் வழங்கிடவும் சிறப்பு நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்கவும் வரைபடங்களுக்கு க.வ./ந.ஊ.இ.எண்.126/2018 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது.

Site Area:3486.79 $m^2$

| Floor Details | FSI Area $m^2$ | Usage |
|---|---|---|
| தரைதளம் | 1499.39 | 38 குடியிருப்புகள் |
| முதல் தளம் | 1758.50 | 34 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 1758.50 | 34 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 1758.50 | 34 குடியிருப்புகள் |
| மொத்தம் | **6774.89** | 130 குடியிருப்புகள் |

பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் செயல்முறைகளின்படியும், பார்வை 4-ல் காணும் செம்பாக்கம் ஊராட்சிமன்றத் தீர்மானத்தின்படியும் 01.09.2018 முதல் 31.08.2023 வரை ஐந்தாண்டுகளுக்கு மட்டும் திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

[அனுமதி கட்டணம் ரூ.3,64,635/- (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து மட்டும்) வங்கிவரைவாக செம்பாக்கம் ஊராட்சி மன்றத்தில் பலவகை ரசீது எண்.7118 நாள்.01.09.2018-ல் செலுத்தப்பட்டு அதன் ரசீது நகல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிளாலர் நலநிதி, ரூ.8,75,100/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண். 530601010038239-ல் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளது]

<u>நிபந்தனைகள்</u>

1. பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர்திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்ற வேண்டும்.

2. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.

3. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

4. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.

5. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

6. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதியை புதுப்பித்து கொள்ள வேண்டும்.

7. அனுமதிக்கும் வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.

8. கட்டிடம் கட்ட பொய்யான ஆவணங்கள் அளித்தது உண்மையென கண்டறியப்பட்டால், இந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே பயன்படுத்திட வேண்டும்.

11. இவ்வளாகத்தின் திட திரவ கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் வசதிகள் தங்களது சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும்.

12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தணிக்கை உறுப்பு - 4

தனி அலுவலர், செம்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திருப்போரூர்.

8/1318

பெறுநர்

M/s.Akshaya Pvt.Ltd.,
G-Square, 4th Floor,
No.46, Rajiv Gandhi Salai(OMR),
Kandanchavadi, Chennai – 600096.

நகல் : ஊராட்சி செயலர், செம்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.